<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 291/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரஞ்சித் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பாலன் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 07.10.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஏரிபாளையத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு காந்தி சவுக்கில் வசித்து வந்தேன். தற்போது மைக்ரோ பைனான்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன் இதற்கு முன்பு Zomato ல் பணிபுரிநது வந்தேன். கடந்த 10.10.2021 ம் தேதியன் இரவு 9.15 மணிக்கு நா்ன் டெலிவரி எடுப்பதற்காக Star bakkery க்கு வந்தேன அப்போது கண்ணனின் வாகனம் வேகமாக சென்று வந்தது. கலைச்செல்வன் தெற்கு பார்த்து இரு சக்கர வாகனத்தில் வந்தார். சம்பவத்தை நான் முழுமையாக பார்க்கவில்லை . 2 பேரும் மாறி மாறி அடித்து கொண்டனர். கலைச்செல்வன் கீழே விழுந்து விட்டார் எனக்கு டெலிவரி டைம் ஆகிவிட்டதால் நான வந்து விட்டேன. போலிசார் சம்பவ இடத்திற்று வந்தனர். 2 தரப்பிலும் கெட்ட வார்த்தையால் பேசினார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. போலிசார்எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் Star bakery ல்வைத்து இரவு 9.30 மணிக்கு சம்பவத்தினத்தன்று விசாரத்தார்கள். நான் கூறியததை கையால எழுதினார்கள் என்றால் ஆமாம். போலிசார் விசாரணையில் இதைதான கூறினிர்களா என்றால் ஆமாம். போலிசார் மது போதையில இருந்தாரா என்றால் அது பற்றி தெரியாது. 2 பேரும் மது போதையில் இருந்தார்களா என்று தெரியாது என்றால் தெரியாது. போலிசார் விசாரணையில் டீ சாப்பிட பேக்கரிக்கு வந்ததக கூறியிருந்தது தவறு என்றால் ஆமாம். டெலிவரிக்காக தான சென்றேன்.

2. 2 பேர் அடிப்பதற்கு முன்பு என்ன நடந்தது என்று தெரியாது என்றால் பார்க்கவில்லை சத்தம் கேட்டு தான் வந்தேன். டெலிவரிக்கு போகும் போது ரிஜஸ்டரை போலிசார் கேட்டு வாங்கினார்களளா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் நீங்கள இல்லை என்றாலும் நீங்கள் கையிருப்பு சாட்சி என்றாலும் சரியல்ல. அசா.1 மது போதையில் இருந்தார் என்று கூறியுள்ள நிலையில் உங்களுக்கு தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக கூறிகிறிர்கள் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 291/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகேசன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பரமன் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 07.10.2024

**முதல் விசாரணை**

நான் வள்ளியம்மாள் காலனியில் வசித்து வருகிறேன். தற்போது நகராட்சி துாய்மை பணியாளராக வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நானும் விக்கி என்பவரும் ஸ்டார் பேக்கரியில் டீ சாட்டபிட்டு எகொண்டிருந்தோம். அப்போது தெரிந்து உதவி ஆய்வளார் அங்கு வந்தார் . அவரை டீ சாப்பிடுமாறு கேட்டு கொண்டோம். அவர் அடிதடி வழக்கு சம்பந்தமாக வந்திருந்தார் என்று கூறி வரைபடம் வரைந்தரார்கள். சாடசி கையொப்பம் கேட்டார்கள். நானும் விக்கியும் விவரம் தெரிந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த **பார்வை மகசர் அசாஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.உங்களுடைய வேலை நேரம் என்ன என்றால் காலை 6.00 மணி– 11.30 மணி வரை. சம்பவ தினத்தன்று  வேலை எங்கு ஒதுக்கியிருந்தார்கள் என்றால் தெரியவில்லை. கையெழுத்துஉள்ளதில் விவரம் தெரியுமா என்றால் எழுத படிக்க தெரியாது.  சாட்சியாக கையொப்பம் கேட்டதால் போட்டிர்கள் என்றால் ஆமாம், வரைபடம் வரைந்தார்கள். காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்திர்கள் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறிகிறிர்கள் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை  நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.